**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 291 /2022 PW1**

10.03.2026 **வா..சா.1 கோதாவரி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 6 முதல் 8, 10, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் அப்பா சொத்தின் மீது தான் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். எனது அம்மா உயில் எழுதி வைத்த சொத்தின் மீது நான் வழக்கு போட்டுள்ளேனா என்றால் எனது அம்மா உயில் எழுதி வைத்தது எனக்கு தெரியாது. நான் எந்தெந்த சொத்தின் மீது வழக்கு போட்டுள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எத்தனை இலக்க சொத்துக்களை வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்று கேட்டால் தெரியவில்லை. எது எனது அம்மா சொத்து, எது எனது அம்மா சொத்து என சொல்ல இயலுமா என்றால் முடியாது. எனது அப்பாவிற்கு அரசாங்கத்தால் பட்டா கொடுக்கப்பட்டு அந்த சொத்தை எனது அப்பா அனுபவித்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பா அனுபவித்து வந்து பட்டா பெற்ற சொத்து மீது வடவீதி முருகன் கோயிலுக்கு சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் தற்போது உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளது என சொல்லி அந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து திருவண்ணாமலை கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 300/2009 தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அதில் நான் 5ம் வாதியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. எனது அப்பா சம்பாதித்த சொத்து சம்மந்தமாக ஒரு வழக்கு போட்டு அதில் தீர்ப்பு வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து விவரங்களை யார் சொன்னார்கள் என்று கேட்டால் எனது வழக்கறிஞரைத்தான் கேட்க வேண்டும். எனது மகள் வழக்கறிஞர் என்றால் சரிதான். எனக்கு எந்த வழக்கு விவரமும் தெரியாது என்றும், எனது மகள் வழக்கறிஞர் என்பதால் அவர் சொல்லிதான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. முதலில் நான் அருள், செல்வம் என்ற 2 வழக்கறிஞர்களை நியமித்து இருந்தேன் தற்போது எனக்கு செல்வம் என்ற வழக்கறிஞர் ஆஜர் ஆகியுள்ளார் அவர் திருவண்ணாமலையை சேர்ந்தவர் ஆவார். எனது சகோதரிகளுடன் நான் பேச்சுவார்த்தையில் உள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை யாருக்கு சொந்தமான, எந்த சர்வே எண்ணில் வந்துள்ளது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, ஆனால் சர்வே எண் எனக்கு தெரியாது. என்னுடன் பிறந்தவர்கள் எல்லாம் எனது அம்மா எழுதிய உயில்படி

சொத்துக்கள் ஆண் வாரிசுகளுக்கு சொந்தம் என சொன்னார்கள் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு வந்த சொத்துக்களை அவர்கள் யாருக்கு வேண்டுமானலும் கொடுக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. எந்த சொத்து பாகம் பிரிக்கப்படாமல் இருக்கிறது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. ஆனால் ஒரே ஒரு வீடு உள்ளது. எனது அப்பாவிற்கு பட்டா மூலமாக வந்த சொத்தில் மட்டுமே நான் பாகம் கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எது அப்பாவின் சொத்து, எது அம்மாவின் சொத்து என்று' பிரித்து நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது அம்மா எழுதி வைத்த 2வது உயில் படி நாங்கள் பிரதிபலன் பெற்று விட்டோம் என்றும், அதனால் அந்த உயிலை Propate செய்ய தேவையில்லை என்றால் சரியல்ல. எனக்கு உயில் எழுதி வைத்த விவரம் தெரியும் என்றும், சொத்தில் பாகம் பெற்றுவிடவேண்டும் என்ற நோக்கில் உயில் எழுதி வைத்த விவரம் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் 2023லேயே எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட பிறகு ஏறக்குறைய 2 ஆண்டுகள் கழித்து எனது தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் என்ன என்று கேட்டால் எனக்கு தெரியவில்லை. எனக்கு வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாது என்றும், என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு இந்த வழக்கானது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பட்டா, சிட்டா யார் பெயரில் உள்ளது என கேட்டால் எனது அம்மா, அப்பா பெயரில் உள்ளது. எனது அப்பா தாக்கல் செய்த 2 வழக்குளிலும், எனது அப்பா இறப்பிற்கு பிறகு, பாபு, பிரபு என்ற இருவர் மட்டுமே நடத்தி வருகிறார்கள் என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்த விவரமே எனக்கு தெரியாது. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், மேற்படி வழக்கில் என்னை வாரிசாக சேர்ப்பது சம்மந்தமாக சம்மன் வந்தது என்றும், அதனை நான் பெற்றுக்கொண்டு வழக்கில் ஆஜராகமால் இருந்து விட்டோம் என்றால் சரியல்ல. வழக்கை நான் நடத்தினால் செலவு செய்யவேண்டி வரும் என கருதி, பாபு, பிரபு ஆகியோர் மட்டுமே வழக்கை நடத்திக் கொள்ளட்டும் என நான் நினைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு 300/2009ல் சம்மந்தப்பட்ட தரப்பினர்களான பிரதிவாதிகள் சாந்தி, வனஜா, தயாநிதி, சசிக்கலா, சுபா மற்றும் சூர்யா ஆகியோர்கள் எனது அப்பா நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வீட்டு கட்டி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் வழக்கு மூலம் தவறு என்றும், சரியாக நீதிமன்றக் கட்டணத்தை மதிப்படாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சாயில்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது அப்பாவின் சொத்தில் மட்டும் நான் பாகம் கோர முடியும் என்றும், எனது அம்மா எழுதி

வைத்த உயில் சம்மந்தமாக நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>12 முதல் 14 மற்றும் 16ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - ஒத்திவைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.